# ஆக்டோபஸ்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



ஆழ்கடல் பல அரிய உயிரினங்களின் இருப்பிடமாகும். நட்சத்திர மீன்கள் (Starfish), ப்லாப்பிஷ் (Blobfish), சுறா, திமிங்கலம், சில வகை நண்டுகள், ஆமைகள், கணவாய்கள் (Squid), ஜெல்லி பிஷ்(Jellyfish) போன்ற பல உயிரினங்கள் ஆழ்கடலில் வாழ்கின்றன.



இவற்றுள் எட்டுக் கைகளுடன் அழகாக நீந்தி வரும் ஒரு உயிரினமே ஆக்டோபஸ் ஆகும். இதனைத் தமிழில் பேய்க்கணவாய் என்று கூறுவர்.



ஆக்டோபஸ் மெல்லுடலி (Mollusks) வகையைச் சார்ந்தது. தனித்து வாழும். முதுகெலும்பு இல்லாமல் மென்மையான கொழகொழப்பான உடலமைப்பைக் கொண்டது.






ஆக்டோபஸ் சூழலுக்கு ஏற்ப நீலம், இளஞ்சிவப்பு, சாம்பல், பழுப்பு, பச்சை, சிவப்பு என நிறத்தை மாற்றும்(Camouflage). ஒரு நொடியில் நிறம் மாறும். இதுவே அதனுடைய தனிச்சிறப்பு ஆகும்.



எதிர் உயிரினங்களிடமிருந்து தன்னைக்காத்துக்கொள்ள கருப்பு நிற திரவத்தை வெளியிட்டு தப்பித்துச் செல்லும்.



தலைக்கு அடுத்து உடல் இல்லாமல் எட்டுக் கைகளைக்(Arms) கொண்டு இருக்கும். ஒவ்வொரு கையிலும் கப் (Suckers) போன்று அமைப்பு இருக்கும். பெரிய கண்களும் மூன்று இதயமும் ஒன்பது மூளையும் இருக்கும்.



**ஹோமோசயனின் (Hemocyanin) இருப்பதால் ஆக்டோபஸ்ஸின் இரத்தம் நீல நிறத்தில் இருக்கும்.**



முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். வாழ்நாள் மிகக் குறைவாகும். ஆறு மாதங்கள் முதல் ஐந்து வருடங்கள் வரை மட்டுமே வாழும்.







ஆக்டோபஸ் நினைவாற்றல் மற்றும் அறிவுத்திறன் உடையது. மேலும் இவை கைகள் மூலம் மிக வேகமாக நீந்தும், தரையில் தவழும்.



ஆக்டோபஸ் விஷத்தன்மை உடையது. மனிதர்களுக்குக் காயத்தை உண்டாக்கும். ஆனால் நீலநிற வளையங்கள் கொண்ட ஆக்டோபஸ் மனிதர்களைக் கொல்லும் அளவுக்கு விஷமுடையது.



இறால், நண்டு, மீன்கள் போன்றவற்றை உண்ணும்.



ஆக்டோபஸில் இருநூற்றுக்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. இனங்களுக்கு ஏற்ப சிறிய ஆக்டோபஸ்(5செமீ) முதல் பெரிய (15 அடி) ஆக்டோபஸ் வரை உள்ளன.

# ஆக்டோபஸ்



## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com